# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 08.01.2026**

**OS No. : 315/2021**

**Dw : 2**

**Name : திரு. ஜாகீர்உசேன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) எனது சொந்த ஊர் பூலாங்குடியிருப்பு ஆகும். 1ம் பிரதிவாதி அனிபாவின் பூர்வீகம் புளியங்குடியாகும். 2ம் பிரதிவாதி மதார்மைதீனுக்கு எனது உறவினர் பெண்ணை திருமணம் செய்துகொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, மதார்மைதீன் எனது நண்பராவார், மேலும் அவர் எனக்கு தூரத்து உறவினர். இவ்வழக்கில் வாதி எந்த சொத்துக்களை பொறுத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே நம்பர் 560/13 மற்றும் சில சொத்துக்களை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். சர்வே நம்பர் 560/13க்கு வடபக்கம் அனிபாவிற்கு வேறு இடமும் உள்ளது என்றால் சற்று தள்ளியுள்ளது. சர்வே நம்பர் 560/12 சொத்தும் அனிபாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கடந்த 03.09.2021ம் தேதி சர்வே நம்பர் 560/12ஐ 1ம் பிரதிவாதி சுப்புலட்சுமி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றும், அதில் நான் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான். கடந்த 26.08.2021ம் தேதியில் சர்வே எண்.560/13ல் 8 சென்ட் நிலத்தை ஹரிஹரன் என்பவருக்கு 1ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுத்தார் என்றும், அதிலும் நான் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2) வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி அவரது மகனான 2ம் பிரதிவாதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும் கடந்த 17.09.2021ம் தேதியில் தனித்தனியே கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கும் 1ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கும் இடையே நெருங்கிய பழக்கம் உண்டு என்றால் அவர்களுடன் நல்ல அறிமுகம் உண்டு. 1ம் பிரதிவாதிக்கு கொரோனா காலக்கட்டத்தில் பண நெருக்கடி மற்றும் பணத்தேவை இருந்தது என்றால் சரிதான். அதனால்தான் வாதியுடன் அவர் ஒரு கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டார் என்றால் சரியல்ல.

3) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் வழக்கறிஞருக்கு நான் சொன்னவை தான். வாதியிடம் நான் மூன்று முறை வாரச்சீட்டு போட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எந்த வருடம் எவ்வளவு தொகைக்கு சீட்டு போட்டேன், அதன் முழு விவரங்கள் என்ன என்ற விவரம் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாதி சீட்டு நடத்தினார் என்று கூறுவது பொய் என்றும், 1ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அவ்வாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே சீட்டு பிரிப்பதில் பிரச்சனை ஏற்பட்டு 2021ம் வருடம் 7வது மாதம் அவர்களுக்கிடையே சமரசம் பேச நான் முயற்சி செய்தேன். எந்த காலக்கட்டத்தில் மேற்படி முயற்சி மேற்கொண்டேன் என்பது பற்றி நிரூபண வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி, வாதியிடம் சில ஆவணங்களை கொடுத்திருந்ததாக நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தால் சரிதான். எந்த தேதியில் 1ம்பிரதிவாதி என்ன ஆவணங்களை கொடுத்தார் என்பது பற்றி நிரூபண வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4) 1ம் பிரதிவாதி அனிபாவிற்கு 6 வீடுகள் உள்ளன என்றால் சரியல்ல, ஒரு வீடுதான் உள்ளது. வாதி, பிரதிவாதிக்கிடையே சிவில் வழக்கு நடப்பது எனக்கு தெரியும் என இவ்வழக்கை பற்றித்தான் நான் குறிப்பிட்டுள்ளேன். என்ன வகைக்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சீட்டு பிரச்சனைக்காக கொடுக்கப்பட்ட 20 ரூபாய் பத்திரத்தில் கிரைய ஒப்பந்தம் எழுதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக என்னிடம் 1ம் பிரதிவாதி தெரிவித்தார். வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே கிரைய ஒப்பந்தம் இருப்பதை 1ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி, பிரதிவாதிகளுக்கிடையே நான் 3 முறை சமரசம் பேச முயற்சி செய்தேன். குறிப்பாக எந்த தேதியில் பேசினேன் என்பது எனக்கு நியாபகம் இல்லை. வாதி, பிரதிவாதிகளுக்கிடையே நடந்த பேச்சுவார்த்தையை 8வது மாதத்தில் நான் வீடியோ எடுத்தேன். ஷாஜகான் முன்னர் பேசியதை மறுத்து மாற்றி பேசியதால் என்னுடைய செல்போனில் வீடியோ எடுத்தேன். என்னிடம் இருந்த அரசாங்கம் வழங்கிய மடிக்கணிணியின் மூலமாக எனது செல்போனில் இருந்த வீடியோவை பென்டிரைவிற்கு மாற்றி அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் வீடியோ எடுக்க பயன்படுத்தப்பட்ட செல்போனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய தயாராக உள்ளேன், தற்சமயம் அந்த செல்போன் எனது வீட்டில் உள்ளது.

(வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சி மேற்படி செல்போனை அவரது வீட்டிற்கு சென்று எடுத்துவந்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததை ஆய்வுசெய்த பின்னர் மீண்டும் குறுக்கு விசாரணை தொடரப்பட்டது)

5) அந்த வீடியோக்களை குறிப்பாக எந்த தேதியில் எத்தனை மணிக்கு எடுத்தேன் என்பதை தற்போது என்னால் சொல்ல இயலாது. பென்டிரைவில் உள்ள VID 20210829132351.mp4 என்ற வீடியோ மட்டுமே தற்போது நான் கொண்டுவந்துள்ள செல்போனில் உள்ளது. பென்டிரைவில் உள்ள மற்றொரு வீடியோவானது தற்சமயம் நான் எடுத்த செல்போனில் இல்லை, அதனை என் வசம் உள்ள மடிக்கணிணியில் பதிவுசெய்து வைத்துள்ளேன். என்னுடைய

செல்போனில் உள்ள அந்தவீடியோ அனிபாவின் வீட்டில் வைத்து எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வீடியோ மதியம் 1 மணி 32 நிமிடங்களுக்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 65–பி certificate–ல் மேற்படி வீடியோவானது வாதியின் வீட்டில் வைத்து படமாக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறாகும். பென்டிரைவில் உள்ள 2 வீடியோக்களை தவிர வழக்கு சம்பந்தமாக வேறு எந்த வீடியோ பதிவும் என் வசம் இல்லை.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi